[2004 நவம்பர் 22

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003—2005 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் தொண்ணூறாவது அறிக்கையினை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் கொலையுண்ட மேலாளர் திரு. சங்கரராமன் குடும்பத்திற்கு நிதியுதவி குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகளை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் மேலாளராகப் பணியாற்றிய திரு. சங்கரராமன் என்பவர், 3-9-2004 அன்று, அத்திருக்கோயிலின் உள்ளே உள்ள அவரது அலுவலகத்தில், பட்டப் பகலில் படுகொலை செய்யப்பட்டார் என்பதையும், அது தொடர்பாக தமிழ்நாடு காவல் துறை தீவிர விசாரணை மேற்கொண்டு வருவதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டி, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி, சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்ற கொள்கையின் அடிப்படையில், தக்க நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொண்டுள்ளது என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும்.

இந்த நிலையில், திரு. சங்கரராமன் அவர்களின் துணைவியார் திருமதி பத்மா தன்னுடைய கணவர் திரு. சங்கரராமன் அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்டார் என்றும், தனது கணவர் பெற்று வந்த சம்பளத்தின் மூலமே குடும்பத் தேவைகள் கவனிக்கப்பட்டு வந்தன என்றும் தெரிவித்துள்ளார். மேலும் திரு. சங்கரராமன் கொலை

2004 நவம்பர் 22] [செல்வி ஜெ ஜெயலலிதா]

செய்யப்பட்ட பிறகு தங்களது குடும்பம் வறுமையில் வாடுகிறது என்றும், சென்னை, மயிலாப்பூரில் உள்ள சமஸ்கிருத கல்லூரியில் படித்து வரும் தங்களது மகன் ஆனந்த சர்மா, காஞ்சிபுரம் அரசு பெண்கள் பள்ளியில் 10 ஆம் வகுப்பு படித்து வரும் தங்கள் மகள் உமா ஆகியோர், தொடர்ந்து கல்வி கற்க வழியின்றி இருப்பதாகவும், தங்கள் குடும்பம் எந்த ஆதரவும் இன்றி, வாழ்க்கை நடத்த வழியின்றி, மிகவும் துன்பமான சூழ்நிலையில் இருப்பதையும் தெரிவித்து, தொடர்ந்து வாழ்க்கை நடத்துவதற்கு நிதியுதவி வழங்க வேண்டுமென்று என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருமதி பத்மா என்னிடம் விடுத்த இந்தக் கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்து, அவரது குடும்ப நிலையை நன்கு கவனத்தில் கொண்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டுள்ளேன் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) காட்டுக் கொள்ளையன் வீரப்பனுக்கு முடிவு கட்டியதற்கு தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படைக்கு மாண்புமிகு முதலமைச்சரின் பாராட்டு

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்”

என்பது வள்ளுவர் வாக்கு. வள்ளுவரின் அந்த வாய்மொழிக்கிணங்க எப்போது செயல்படுவது, எப்படிச் செயல்படுவது, எந்த இடத்தில் செயல்படுவது என்று தீர்க்கமாகச் சிந்தித்து, திடமாகச் செயல்பட்டு தமிழ்நாடு காவல் துறை ஒரு மகத்தான வெற்றியை, ஒரு மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. காட்டுக் கொள்ளையன் வீரப்பனுக்கு ஒரு முடிவு கட்டியதுதான் அந்த மகத்தான வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி)

வன வள்ங்களைக் கபளீகரம் செய்த பயங்கர காட்டுக் கொள்ளைக்காரன், மனித உயிர்களை மலிவாகக் கருதிய கொலைகாரன், யானைகளை இரக்கமின்றி கொன்று குவித்த அசுரன், ஈவு இரக்கம் அறியாத வழிப்பறிக் கொள்ளையன், தமிழ்நாட்டை மட்டுமல்லாமல், கர்நாடகாவையும் கடந்த 20 ஆண்டுகளாக பீடித்திருந்த இழிவான சாபக்கேடு--இத்தகைய இழிவுகளின் இருப்பிடமாய்த் திகழ்ந்த வீரப்பனின் கொடுமைகளுக்கெல்லாம் 18-10-2004 அன்று ஒரு முற்றுப்புள்ளி